மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாயூரம் நகரில் காவிரி ஆற்றின் குறுக்கே பொறிமதகு கட்டும் வேலைக்காக 1973-ம் ஆண்டு ஜூன் மாத இறுதி வரை ரூ. 1,50,770 செலவழிக்கப்பட்டுள்ளது.

கள்ளப்பெரம்பூர் ஏரியை ஆழப்படுத்துதல்

*194—திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் கூற்றம், கள்ளப்பெரம்பூர் ஏரியை ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏரிகளை புதுப்பிப்பதற்கான திட்டத்தின் கீழ்இந்த ஏரியை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம்முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : இந்த ஏரியை புதுப்பிப்பதற்கு "டீ ஸில்டிங் கம் ரெக்லேமேஷன் ஸ்கீமின்" கீழ் திட்டம் வகுக்கப் பட்டிருக்கிறது. அநேகமாக எடுத்துக் கொள்ளப்படலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த ஏரியை ஆழப்படுத்துவதற்குப் பதிலாக அதில் தற்சமயம் நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாயம் நடந்துகொண்டிருக்கிறது. அம்மாதிரி விவசாயத்திற்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : ஏரியை விவசாயத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதைப் போன்ற திட்டம் கிடையாது.

கோவையில் புறச்சாலை அமைப்பு

*195 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள புறச்சாலைத் திட்ட வேலை எப்போது துவங்கும்?

(இ) மேற்படி வேலை எப்போது முடிவுபெறும் ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : (அ) இவ்வேலை இன்னும் துவக்கப்படவில்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

1974 சனவரி 28]

திரு. சு. துரைசாமி : இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ரூ. 36,425 இலட்சம் செலவு ஆகும் என்று திட்டமிடப்பட்டு, இதற்கான தொழில் நுட்ப ஒப்பளிப்பும் அளிக்கப்பட்டிருக்கிறது.

மாயூரத்தில் இரயில்வே மேம்பாலம்

*196 வினு— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்தில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலத்தில் வேலை எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மார்ச் 1974 இறுதிக்குள் வேலை முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த மேம்பாலத்திற்கு மொத்த மதிப்பீடு எவ்வளவு ? மாநில அரசு எவ்வளவு ஒதுக்கித் தந்திருக்கிறது? ரயில்வேத் துறை எவ்வளவு தந்திருக்கிறது என்கின்ற விவரம் அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : அந்த விவரம் என்னிடம் இல்லை.

Factory for production of Fluorine

* 197 Q.—Thiru R. R. MUNUSWAMY :
Thiru P. SOUNDARAPANDIAN :
Thiru N. K. PALANISWAMY :
Thiru T. SONIAH : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any factory for the manufacture of Fluorine is to be started in the Joint Sector in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு செ.மாதவன் : (அ) and (இ) : ஆண்டு ஒன்றுக்கு 6,000 டன் அலுமினியம் புளோரைட் தயாரிக்க ரூபாய் 3 கோடி செலவில் கூட்டுத் துறையில் ஒரு தொழிற்சாலை நிறுவப்படும். கூட்டுத் துறைக் கம்பெனியின் பெயர் தமிழ்நாடு புளோரின் அன்ட் அல்லைட் கெமிக்கல்ஸ் லிமிடெட். மதுரை நகரிலிருந்து 8 மைலில் மணலூர் என்ற இடத்தில் தொழிற்சாலை நிறுவப்படும்.